


**15. 07. 2026**

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - பிரிட்டன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தால் விவசாயிகள், தொழில் முனைவோா்கள் புதிய வாய்ப்புகளை பெறுவாா்கள் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி மகிழ்ச்சி தொிவித்துள்ளாா்.

2. ஆயுர் வேதத்தை முன்னெடுத்து செல்ல ஆயுஷ் அமைச்சகம் உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து செயலாற்றுவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி கூறியுள்ளாா்.

3. தமிழக முன்னாள் முதலமைச்சர் காமராஜரின் 124ஆவது பிறந்த தினம் கல்வி வளர்ச்சி நாளாக இன்று கொண்டாடப்படுகிறது.

4. தென்மாநில எல்லை பகுதிகளில் போதை பொருள் கடத்தல் சங்கிலியை முறியடிக்க உரிய ஒத்துழைப்பு வழங்க முதலமைச்சர் திரு. விஜய் உறுதி அளித்துள்ளதாக கேரள அமைச்சர் திரு. ரமேஷ் சென்னிதலா தொிவித்துள்ளாா்.

5. சமூக நீதித்துறையின் கீழ் செயல்படும் உணவு விடுதிகளில் தரமான உணவின் அவசியத்தை மாநில சமூக நீதித்துறை அமைச்சர் திரு. வன்னியரசு வலியுறுத்தியுள்ளாா்.

***********

பிரதமர்

இந்தியா – பிரிட்டன் தடையற்ற பொருளாதார வர்த்தக ஒப்பந்தம் இன்று நடைமுறைக்கு வந்ததன் மூலம் இருநாடுகளுக்கிடையிலான நட்புறவு முக்கிய கட்டத்தை எட்டியுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி மகிழ்ச்சி தொிவித்துள்ளாா்.

இந்த ஒப்பந்தம் இந்திய விவசாயிகள் தொழில்முனைவோா்கள், சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு எழுச்சியூட்டுவதோடு, பல்வேறு துறைகள் பிரிட்டன் சந்தையில் இணைய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாக எடுத்துரைத்தாா்.

தொழில்நுட்பம், தொழில் சேவைகள், புத்தாக்கம், படைப்பாற்றல் திறன் போன்றவற்றில் ஒத்துழைப்பு மேலும் அதிகாித்து, திறன் பரிவர்த்தனைக்கு வழிகோலும் என்று பிரதமர் குறிப்பிட்டாா்.

இருநாடுகளுக்கிடையிலான சமூக பாதுகாப்பு ஒப்பந்தத்தால் இந்திய தொழில் நிறுவனங்களின் போட்டி திறன் அதிகாிப்பதோடு இந்தியர்கள் அங்கு பணியாற்றுவதற்கான வாய்ப்புகளும் பெருகியுள்ளதாக குறிப்பிட்டாா்.

வளம் சார்ந்த பங்களிப்பில் இருநாடுகளும் இணைந்து முனைப்புடன் செயலாற்றும் என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

***********

குடியரசு தலைவர்

உலக அளவில் ஆயுர்வேத சிகிச்சையையும் யோக கலையையும் மத்திய அரசு எழுச்சியுடன் முன்னெடுத்து சென்று புது சக்தியை ஊட்டியுள்ளதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் அகில இந்திய ஆயுர்வேத நிறுவனத்தில் மூன்று நாள் சிறப்பு கருத்தரங்கை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து, ஆயுர்வேத மருத்துவத்தை சர்வதேச தரத்தில் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆயுஷ் அமைச்சகம் மேற்கொண்டுள்ளதாக கூறினார்.

தரமான ஆவணங்கள், டிஜிட்டல் சுகாதார ஒருங்கிணைப்பு, நவீன அறிவியல் ஆராய்ச்சி தொழில் நுட்பங்களால் ஆயுர் வேதத்தை உலக நாடுகள் ஏற்றுக்கொள்ள செய்ய முடியும் என்றார்.

ஆயுர்வேதத்தை சர்வதேச தரத்திற்கு கொண்டு செல்வதற்கான வலுவான தளத்தை இந்த கருத்தரங்கு ஏற்படுத்தும் என்று குடியரசு தலைவர் நம்பிக்கை தெரிவித்தார்.

***********

காமராஜர்

தமிழக முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜரின் 124 ஆவது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு.நரேந்திரமோடி, மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன், முதலமைச்சர் திரு.விஜய், வெளியிட்டுள்ள செய்தியில் பொதுவாழ்விற்கு அவர் தம் அர்ப்பணிப்பையும், எளிமையான வாழ்க்கையையும் எடுத்துரைத்துள்ளனர்.

சென்னை அண்ணா சாலையில் உள்ள அன்னாரது திருவுருவ சிலைக்கு முதலமைச்சர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

காமராஜரின் சொந்த ஊரான விருதுநகரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் உள்ள திருவுருவு சிலைக்கு ஆட்சித்தலைவர் டாக்டர் சுகபுத்ரா இன்று, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

கல்வி வளர்ச்சி நாளாகவும் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

***********

முதலமைச்சர்

போதை பொருள் புழக்கத்தை முற்றிலும் ஒழிப்பதற்கான கேரள அரசின் ஆபரேசன் டிஃபான் திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு.விஜய் உறுதி அளித்துள்ளதாக கேரள மாநில உள்துறை அமைச்சர் திரு.ரமேஷ் சென்னிதலா தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் முதலமைச்சர் திரு.விஜய்-ஐ இன்று சந்தித்து ஆலோசனை மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநில எல்லைகளில் போதை பொருள் கடத்தல்

இணைப்பை கூட்டு நடவடிக்கை மூலம் முறியபடிப்பதற்கான ஆலோசனைகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக கூறினார்.

எல்லை மாவட்டங்களில் போதை பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த தமிழக அரசிடம் உதவி கோரப்பட்டதாகவும், தமிழக போலீஸார் உரிய உதவிகளை வழங்குவார்கள் என்று முதலமைச்சர் உறுதியளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கேரளாவில் போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்க முதலமைச்சருக்கு அழைப்பு விடுத்ததாக கூறிய அவர் போதை பொருள் ஒழிப்பு நடவடிக்கைக்கு தென்மாநிலங்களை சேர்ந்த ஐந்து காவல்துறை தலைமை இயக்குனர்கள் ஒருங்கிணைந்து நடவடிக்கை மேற்கொள்ள ஆலோசித்ததாக தெரிவித்தார்.

அரசியலுக்கு அப்பாற்பட்டு போதை பொருள் ஒழிப்பில் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று திரு.ரமேஷ் சென்னிதலா கேட்டுக்கொண்டார்.

***********

வன்னியரசு

சமூக நீதித்துறையின் கீழ் செயல்படும் உணவு விடுதிகளில், வழங்கப்படும் உணவு தரமானதாக இருக்க வேண்டியதன் அவசியத்தை மாநில சமூகநீதித்துறை அமைச்சர் திரு.வன்னியரசு அறிவுறுத்தியுள்ளார்.

விடுதி காப்பாளர்கள் விடுதிகளில் வழங்கப்படும் தினசரி உணவுகளை புகைப்படம் எடுத்து துறைசார்ந்த வாட்ஸ் அப் குழுவில் பகிரவும் அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

உணவு தரமானதாக இல்லை என்று புகார் வந்தால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் எச்சரித்துள்ளார்.

***********

தேர்தல் ஆணையம்

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி சென்னையில் மாநில தேர்தல் ஆணையர் திருமதி ஜோதி நிர்மலா சாமி, தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள், மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

ஆணையத்தின் செயலர் திரு. சண்முக சுந்தரம் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

***********

எடப்பாடி

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி சென்னை ராயப்பேட்டை கட்சி அலுவலகத்தில் ஈரோடு மாவட்ட நிர்வாகிகளுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

இன்று பிற்பகல் திருவள்ளூர், தேனி மாவட்ட நிர்வாகிகளுடன் அவர் கலந்தாலோசிக்கிறார்.

நாளை புதுக்கோட்டை கடலூர் மாவட்டங்கள்,

வரும் 18ஆம் தேதி கரூர் நீலகிரி விருதுநகர் மாவட்டங்களின் நிர்வாகிகளுடன் அவர் கலந்துரையாடுகிறார்.

சட்டப்பேரவை தேர்தல் தோல்வியை அடுத்து மேற்கொள்ள வேண்டிய நிலைப்பாடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்படுகிறது.

***********

திறன் பயிற்சி

திறன் இந்தியா இயக்கத்தின் 11ஆவது ஆண்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

நாட்டின் இளையோருக்கு வேலை வாய்ப்பு, தொழில்முனைவு, நிலையான வாழ்வாதாரத்தை ஏற்படுத்தும் வகையில் 2015-ம் ஆண்டு பிரதமர் திரு.நரேந்திரமோடி திறன் இயக்கத்தை தொடங்கிவைத்தார்.

இதனையடுத்து 6 கோடிக்கும் மேற்பட்ட இளையோர் பல்வேறு திட்டங்கள் மூலம் திறன் ஆளுமையை பெற்றுள்ளனர்.

ஆண்டுதோறும் ஒருகோடி இளைஞர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

உலக திறன் வளர்ச்சி தினம் இன்று கொண்டாடப்படும் நிலையில் வேலை வாய்ப்புகளுக்கான திறவுகோலாக திறன்பயிற்சிகள் இளையோருக்கு ஆளுமையை உறுதி செய்து வருகிறது.

***********

நாகை

நாகை மாவட்டத்தில் நிலவும் கடும் வெயிலை அடுத்து சுற்றுவட்டார பகுதிகளில் 9 ஆயிரம் ஏக்கரில் உப்பு உற்பத்தி பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

நீலகிரி

நீலகிரி மலை ரயிலுக்கு யுனஸ்கோவின் பாரம்பரிய அந்தஸ்து வழங்கி 21 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் ரயில் பயணிகளுக்கு குன்னூர் ரயில் நிலையத்தில் இனிப்புகள் வழங்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***********

ஆடிதபசு

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோவிலில் ஆடி தபசு திருவிழா வரும் 18ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

முக்கிய நிகழ்வான ஆடி தபசு வரும் 28ஆம் தேதி நடைபெறுவதை ஒட்டி மாவட்டத்திற்கு அன்று உள்ளூர் விடுமுறை அளித்து ஆட்சித்தலைவர் திரு.ரஞ்சித் சிங் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

***********

இருவரி

மதுரை மாவட்டம் பேரையூர், எழுமலை, எம்.கல்லுப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகளை ஆட்சித்தலைவர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா இன்று நேரில் ஆய்வு செய்தார்.

பேரையூர் வட்டத்தில் தகுதியான பயனாளிகளுக்கு விதிமுறைகளுக்கு ஏற்ப பட்டாக்களை வழங்க அலுவலர்களை அவர் அறிவுறுத்தினார்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் முன்னாள் படை வீரர்களுக்கான சிறப்பு குறைதீர் நாள் கூட்டம் நாளை நடைபெறுகிறது.

சேலம் மேட்டூர் அனல் மின் நிலையத்தில் கொதிகலனின் ஏற்பட்டுள்ள பழுதை அடுத்து 810 மெகாவாட் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. பழுதை சரிசெய்யும் பணியில் மின் வாரிய ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் மத்திய அரசின் திட்டங்கள் குறித்த மூன்று நாள் கண்காட்சி இன்று தொடங்கியது,

***********

விழிப்புணர்வு

தர்மபுரி மாவட்டத்தில் உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திரு.சரவணன் இன்று கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

திருப்பத்தூரில் நூற்றுக்கணக்கான மாணாக்கர் விழிப்புணர்வு பதாகைகளுடன் பங்கேற்ற பேரணியை ஆட்சித்தலைவர் திரு.ரவிக்குமார் துவக்கிவைத்தார்.

மயிலாடுதுறையில் ஏராளமான கல்லூரி மாணாக்கர் இப்பேரணியில் பங்கேற்று விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி சென்றனர்.

கடலூர் மாவட்டம் விருதாச்சலத்தில் போக்குவரத்து காவல்துறை சார்பில் தலைகவசம் அணிவதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் இன்று நடைபெற்றது.

***********

வனத்துறை

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் ஆசனூரிலிருந்து கொள்ளேகால் செல்லும் சாலையோர வனப்பகுதியில் சிறுத்தை நடமாட்டம் இருப்பதால் வனப்பகுதி சாலைகளில் மித வேகத்தில் வாகனங்களை இயக்குமாறு வனத்துறை அறிவுறுத்தியுள்ளது.

***********

FIFA

FIFA உலக கோப்பை கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்திற்கு ஸ்பெயின் முன்னேறியுள்ளது.

டெக்சாஸில் நடைபெற்ற முதலாவது அரையிறுதியில் ஸ்பெயின் – ஃபிரான்ஸை 2-0 என்ற கோல் கணக்கில் வென்று இறுதி போட்டிக்குள் நுழைந்தது.

அட்லாண்டாவில் நாளை அதிகாலை 12.30 மணிக்கு நடைபெறும் இரண்டாவது அரையிறுதியில் அர்ஜென்டினா – இங்கிலாந்துடன் மோதுகிறது.

இறுதிபோட்டி நியூஜெர்சியில் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது